செ.வெ.எண்:09 நாள்:04.06.2018

**கரூரில் காசநோயை கண்டறியும் நடமாடும் பரிசோதனைக்கூட வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார்.**

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் காசநோயை கண்டறியும் நவீன வசதியுடன் கூடிய ‘‘நடமாடும் சிபிநாட் பரிசோதனைக்கூடம்’’ தாங்கிய வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.06.2018) கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

காசநோய் என்ற உயிர்க்கொல்லி நோயை தடுப்பதற்காக தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், அதிநவீன வசதியுடன் கூடிய நடமாடும் சிபிநாட் பரிசோதனைக்கூடம் கரூர் மாவட்டத்தில் 04.06.2018 முதல் 09.06.2018 வரை இயக்கப்படுகிறது. இன்று (04.06.2018) வாங்கபாளையம், அருகம்பாளையம் பகுதியிலும், 05.06.2018 நாளை ஆண்டாங்கோவில், விஸ்வநாதபுரி பகுதியிலும், 06.06.2018 அன்று மலைக்கோவிலூர் ஊராட்சி, ஷா நகர், பள்ளபட்டி பகுதியிலும், 07.06.2018 இனுங்கூர் ஊராட்சி நச்சலூர் பகுதியிலும், 08.06.2018 அன்று தோகைமலை ஊராட்சி காவல்காரன்பட்டி காலனியிலும், 09.06.2018 அன்று பஞ்சபட்டி ஊராட்சி வீரராக்கியம் பகுதியிலும் இவ்வாகனம் மூலம் பரிசோதனை நடத்தப்படவுள்ளது. மருத்துவமனைகளுக்கு சென்று பரிசோதனை செய்தால் 2 நாட்களாகும். இவ்வாகனம் வரும் பரிசோதனை செய்தால் 2 மணி நேரத்தில் பரிசோதனை முடிவு அறிவிக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களும், அதற்கான அறிகுறி உள்ளவர்களும் பரிசோதனை வாகனம் வரும் நாட்களில் பயன்படுத்தி சிகிச்சை மேற்கொள்ளலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவப்பணிகளின் இணை இயக்குநர் மரு.விஜயகுமார், துணை இயக்குநர் (காசநோய்) மரு.இராமசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**